பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 07 2025 **TUESDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமரின் ஜன்தன் வங்கிக்கணக்குகளில் பரிவர்த்தனை இல்லாத கணக்குகளை மூடுவது குறித்து எவ்வித அறிவுறுத்தலும் வழங்கப்படவில்லை என்று மத்திய அரசு கூறியுள்ளது.

2. சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று மத்திய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

3. இளைஞர்களிடையே அறிவியல் மீதான ஆர்வத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

4. பச்சிளம் குழந்தைகள் மற்றும் சிறார்களுக்கு அளிக்கப்படும் மலேரியா சிகிச்சைக்கான மருந்துக்கு சுவிட்சர்லாந்து அரசு அனுமதி வழங்கியுள்ளது.

5. மேற்குவங்கம், ஒடிஷா, ஜார்கண்ட் மாநிலங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-இனி விரிவான செய்திகள்--

**<<<<<<<<>>>>**

பிரதமரின் ஜன்தன் வங்கிக்கணக்குகளில் பரிவர்த்தனை இல்லாத கணக்குகளை மூடுவது குறித்து எவ்வித அறிவுறுத்தலும் வழங்கப்படவில்லை என்று மத்திய அரசு கூறியுள்ளது

இதுதொடர்பாக, நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஊடகங்களில் வெளியான செய்திகள் தவறானவை என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

பரிவர்த்தனைகள் நடைபெறாத வங்கிக்கணக்குகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், சம்பந்தப்பட்ட வங்கிகள் வாடிக்கையாளர்களை தொடர்புகொண்டு அவற்றை செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

ஜன்தன் வங்கிக்கணக்குத் திட்டம், ஆயுள் காப்பீட்டுத்திட்டம், அடல் ஓய்வூதியத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களின் செயல்பாடுகளை வலுப்படுத்தும் வகையில், நாடு முழுவதும் மூன்று மாதகால பிரச்சாரம் நடைபெற்று வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<<<>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரேசில் அதிபர் திரு **Luiz Inacio Lula Silva**-வுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்துகிறார்.

இந்த சந்திப்பின்போது, இந்தியா – பிரேசில் இடையே வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி, விண்வெளி, தொழில்நுட்பம், விவசாயம், சுகாதாரம் மற்றும் மக்கள் தொடர்பு உள்ளிட்ட துறைகளில் இணைந்து செயல்படுவது குறித்து விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனையடுத்து, இருநாடுகளுக்கும் இடையே நான்கு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, சமூக வலைதளத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில், அந்நாட்டு இசைக்குழு அளித்த வரவேற்பு ஆப்பிரிக்கா – பிரேசில் இடையேயான நட்புறவை எடுத்துக்காட்டும் வகையில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் பிரேசில் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் இறுதிக்கட்டமாக நாளை நமீபியா செல்கிறார்.

இந்த பயணத்தின்போது, கச்சா எண்ணெய், எரிவாயு, ஹைட்ரோ கார்பன், அரியவகை கனிமங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>

சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று மத்திய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார

அன்னையின் பெயரில் மரக்கன்று நடும் திட்டத்தையும், ஃபரிதாபாத் - நொய்டா சர்வதேச விமான நிலையத்திற்கான விரைவுச்சாலையையும் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இத்திட்டம் மக்களின் கலாச்சாரம் மற்றும் சமூக பொறுப்புணர்வுக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

மூங்கில் உள்ளிட்ட பல்வேறு புல் வகைகளை கொண்டு செய்யப்படும் பொருட்களின் பயன்பாடு அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டில் வாகன உற்பத்தித்துறை உலக அளவில் மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக அவர் கூறினார்.

இதன்மூலம், நான்கரை கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளதாகவும், ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது என்றும் திரு நிதின்கட்கரி தெரிவித்தார்.

<<<<<<<>>>>

இளைஞர்களிடையே அறிவியல் மீதான ஆர்வத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தானில் ‘Dholpur அறிவியல் மையத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

விஞ்ஞான் சேது முன்முயற்சியின்கீழ், நோய் எதிர்ப்பு சக்திக்கான தேசிய நிறுவனமாக இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பின்னர், பள்ளி மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த அறிவியல் கண்காட்சியையும் திரு ஜிதேந்திர சிங் பார்வையிட்டார்.

<<<<<<<>>>>

இந்த ஆண்டு ஹஜ் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்கள் இம்மாதம் 31-ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்று மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இதற்கான இணையதளம் வாயிலாகவும், **Haj Suvidha** மொபைல் செயலி வாயிலாகவும் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவித்தார்.

ஹஜ் பயணத்திற்கான வழிகாட்டுதல் நெறிமுறைகளை புரிந்துகொண்டு விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தியாவில் உள்ள ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் ஹஜ் புனித யாத்திரையை மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு மத்திய அரசு மேற்கொண்ட விரிவான ஏற்பாடுகள் காரணமாக ஒரு லட்சத்து 75 ஆயிரம் இஸ்லாமியர்கள் புனித யாத்திரை மேற்கொண்டதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>

இந்தியாவில் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்துவரும் சந்தை வாய்ப்புகளை வெளிநாட்டு நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், **CISCO** நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி திரு **Chuck Robbins** மற்றும் நிறுவன பிரதிநிதிகளை சந்தித்து பேசியது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் அதிகரித்துவரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் 6-ஜி அலைக்கற்றை சேவை உள்ளிட்ட தொழில்நுட்ப வசதிகள் சாமானிய மக்களின் மேம்பாட்டிற்கு உதவிடும் வகையில் அமைய வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் உலகின் சக்திவாய்ந்த மையமாக இந்தியா உருவெடுத்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

தொழில்நுட்பத்துறையில் முதலீடுகளுக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்துக்கு தேவையான டிஜிட்டல் நடைமுறைகளை மேம்படுத்துவது, சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்நிறுவனம் மேற்கொண்டுவரும் விரிவாக்கப்பணிகளை திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா வரவேற்றார்.

<<<<<<<>>>>

பச்சிளம் குழந்தைகள் மற்றும் சிறார்களுக்கு அளிக்கப்படும் மலேரியா சிகிச்சைக்கான மருந்துக்கு சுவிட்சர்லாந்து அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**'Novirtis '** நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள உலகின் முதலாவது மலேரியா சிகிச்சைக்கான மருந்துக்கு **'Coartem** என்று பெயரிடப்பட்டுள்ளது.

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மலேரியா பாதிப்பால் ஏற்படும் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில், இந்த மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆப்பிரிக்காவில், இந்த மருந்தின் உற்பத்தி மற்றும் விநியோகம் அடுத்த சில வாரங்களில் தொடங்கும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<<<>>>>

தமிழகத்தின் விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்த மலையேற்ற வீராங்கனை முத்தமிழ் செல்வி உலகில் உள்ள உயரமான மலைச்சிகரங்களில் ஏறிய முதலாவது இந்திய பெண் என்ற சாதனையை படைத்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த சாதனை தமக்கு மிகவும் பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்று தெரிவித்தார்.

<<<<<<<>>>>

தமிழகத்தில் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் இம்மாதம் 14-ஆம் தேதி குடமுழுக்கு விழா நடைபெறுகிறது.

இதற்கான முன்னேற்பாட்டுப்பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>

மேற்குவங்கம், ஒடிஷா, ஜார்கண்ட் மாநிலங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் மத்தியப்பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வருவதாகவும், இதன் காரணமாக பல்வேறு மாநிலங்களில் பரவலாக தொடர் மழை பெய்து வருவதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, கிழக்கு மத்தியப்பிரதேச பகுதிகளில் கனமழைக்கான சிவப்பு நிற எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

தில்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, மேற்குவங்கத்தில் ஹூக்ளி, **'Purba Bardhaman, Paschim, Medenipur, Binkura '**உள்ளிட்ட மாவட்டங்களில் அதிகனமழைக்கான ஆரஞ்சு நிற எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **'Sahaja Yamalapalli '** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 6-2 என்ற செட் கணக்கில், கனடாவின் **'Katherine Sebov'**-வை வென்றார்.

--------

உலகக்கோப்பை தகுதிச்சுற்று வில்வித்தை இறுதிக்கட்ட போட்டிகள் ஸ்பெயினில் இன்று தொடங்குகிறது.

மேட்ரிட்டில் நடைபெறும் இப்போட்டியில், 16 பேர் கொண்ட இந்திய அணி பங்கேற்கிறது.

இம்மாதம் 13-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில் 49 நாடுகளை சேர்ந்த 336 வீரர்கள் கலந்துகொள்கின்றனர்.

இதில் வெற்றிபெறும் வீரர்கள், சீனாவின் **Nanging'**நகரில் அக்டோபர் மாதம் நடைபெறும் உலகக்கோப்பை வில்வித்தை இறுதிப்போட்டியில் பங்கேற்க தகுதிபெறுவர்

**<<<<>>>**